Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 122

செவ்வாய்க்கிழமை 28 மார்ச் 2023

பங்குனி 14 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"உப்பிடி ஆயிரத்தெட்டு விசாரணை வைச்சிருப்பினம். ஆனால் ஒண்டுக்கும் தீர்வில்லையே"

முகாமையாளரை இடைநிறுத்திய விவகாரம்;

## சிறுவர் இல்ல அலுவலகம் நேற்றுமாலை அடித்துடைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28
திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க சைவச் சிறுவர் இல்ல விடுதி நிர்வாகத்துக்கு எதிராக நீதிமன்றில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கில், நிர்வாகத்துக்கு எதிராக வாக்குமூலம் வழங்கிய விடுதியின் முகாமையாளரை பதவி விலக்கும் உத்தரவை சிறுவர் நீதிமன்றம் வழங்கியது. இதன் எதிரொலியாக, சைவ வித்தியா »10

சிவலிங்கம் உடைப்பு

## பின்னணியில் தொல்பொருள் திணைக்களமா?

வவுனியா, மார்ச் 28
வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்குச் செல்வதற்கு எமக்குத் தடைவிதிக்கப்பட்டு தொல்பொருள் திணைக்களத்தினரே அங்கு தொடர்ச்சியாகச் சென்று வந்த »10

# வெடுக்குநாறி மலை அராஜகம்: விசாரணைக்கு ரணில் பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

வவுனியா வடக்கு வெடுக்குநாறி மலையிலுள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இடித்தழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறும், ஆலயத்தை மீள அமைத்துக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார். »11

## ஐ.ஓ.சி. தலைவர் ரணிலுடன் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 28
இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஸ்ரீகாந்த் மாதவ், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துள்ளார். »10

## ஆதிலிங்கம் அழித்தொழிப்பு; குண்டர்களின் காடைத்தனமே

இப்படிச் சொல்கிறார் துறைசார் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க

யாழ்ப்பாணம், மார்ச் 28
வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இடித்தழிக்கப்பட்டமை தொடர்பில் அரசு உரிய கவனம் செலுத்தும். பொலிஸாரும் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பார் »11

## வெடுக்குநாறி விவகாரம்; பலமுனைப் போராட்டம்

யாழ். பல்கலையில் நேற்று

நல்லூரில் இன்று

வியாழன்று வவுனியாவில்

விரிவு:- பக்.11

## ஐ.ஓ.சிக்கு போட்டியாக 3 நிறுவனங்கள் களத்தில்!

எரிபொருள் விற்பனைக்கு அரசாங்கம் அனுமதி

கொழும்பு, மார்ச் 28
இலங்கையில் எரிபொருள் சந்தையில் நுழைவதற்கு 3 வெளிநாட்டு நிறுவனங்களுக்கு »10

விரிவுகள்:- பக் - 11 இல்

## பெற்றோலிய தொழிற்சங்கத்தினர் போராட்டத்தில் குதித்தனர்

## வெடியரசன் கோட்டை: வெடிக்கிறது போராட்டம்

## குட்டிப் புத்தர் சிலைதான் கச்சதீவில் வைத்துள்ளோம்

கடற்படை குத்துக்கரணம்

கொழும்பு, மார்ச் 28
கச்சதீவில் பணிபுரியும் கடற்படையினரில் பெரும்பான்மையானவர்கள் பௌத்தர்கள் என்பதால், அவர்களின் வழிபாட்டுக்காகவே »11

## மரத்துடன் மோதியது 'ஹைஏஸ்' சாரதி பரிதாபகரமாக உயிரிழப்பு

மிருசுவிலில் நேற்று அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்ப்பாணத்திலிருந்து தர்மபுரம் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த 'ஹைஏஸ்' வாகனம் வீதியை விட்டு விலகி மரத்துடன் »11

## நாவலர் மண்டபத்தை தாரைவார்த்தார் ஆளுநர்

யாழ்ப்பாணம், மார்ச் 28
நாவலர் கலாசார மண்டபத்தின் பொறுப்புக்கள் கொழும்பு அரசின் கீழுள்ள இந்து கலாசார திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. »11

## மாநகரசபை ஆணையாளருக்கு வடக்கு ஆளுநரால் நெருக்குதல்?

யாழ்ப்பாணம், மார்ச் 28
நாவலர் கலாசார மண்டபத்தின் நிர்வாக நடவடிக்கைகளில் இருந்து யாழ். மாநகர சபையை உடனடியாக வெளியேறுமாறு ஆளுநர் அறிவித்திருப்பதாகச் செய்தி »10






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதவெறியின் உச்சமே சிவன் ஆலய அழிப்பு!

## இந்துசமயப் பேரவை கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

**இலங்கையில் நடைபெற்று வருகின்ற மதவெறிச் செயலின் உச்ச கட்டச் செயற்பாடே வெடுக்குநாறிமலைச் சிவன் ஆலய அழிப்பு. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று இந்து சமயப்பேரவை கண்டனம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்த அமைப்பின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-




இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்பது உலகை ஏமாற்றப் பயன்படுத்தும் சொற்பிரயோகமே தவிர வேறொன்றுமில்லை. இந்தநாடு பௌத்தநாடு என்பவர்கள் பௌத்த தர்மத்தை முதலில் அறிந்து பின்பற்றப் பழகவேண்டும். புத்தபகவான் எங்காவது ஒரு கோயிலை இடித்தாரா? அல்லது இடிக்குமாறு போதித்தாரா? சிங்கள இன வெறியர்கள் தமது மதம் பௌத்தம் என்று கூறுவதை முதலில் நிறுத்துவதே புத்த பகவானுக்குச் செய்யும் நன்றிக்கடன். இவர்கள் தம்மைப் பௌத்தர்கள் என்று கூறினால் புத்த பகவானே ரத்தக்கண்ணீர் வடிப்பார். இவர்கள் தாம்மட்டுமே பௌத்தர்கள் என்று எண்ணித் திமிருடன் செயற்படப்பார்க்கிறார்கள்.

தமிழர்கள் பௌத்தர்களாக இருந்ததற்கான சான்றுகளை வரலாற்று ஆசிரியர்கள் முன்வைக்கின்றனர். இதற்கான இலக்கியச் சான்றுகள் ஏராளமுண்டு. இது இவ்வாறிருக்க தம்மைத் தாமே பௌத்தர்கள் என்று கூறும் இவர்கள் முதலில் பௌத்த தர்மத்தை முறையானவர்களிடம் படிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த ஈனச்செயலுக்கு பிராயச்சித்தமாக இவ்வாலயத்தை உடனடியாக மீளுருவாக்கி வழிபாட்டுக்குத் திறந்துவிடுவதோடு இத்தகைய சம்பவம் தொடராதிருக்க பாதுகாப்பு வழங்கவேண்டும் - என்றுள்ளது. (ம)

# பௌத்த நாடு என்ற மாயை பேரழிவையே ஏற்படுத்தும்!

## சர்வதேச இந்து இளைஞர் பேரவை கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

இலங்கை ஒரு பௌத்த நாடு என்ற மாயையில் இழிசெயல்களில் தொடர்ந்தும் ஈடுபட்டால், அது நாட்டில் பெரும் அழிவுகளைத்தான் ஏற்படுத்தும் என்று சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சிவஸ்ரீ ஜெ.மயூரக்குருக்கள் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

குருந்தூர் மலையில் கம்பீரமான விகாரையொன்று ஈரம்காயாது நிற்கிறது. ஆனால், இன்று வெடுக்குநாறிமலை கண்ணீர் வடிக்கிறது. முதுகெலும்புகள் இல்லாத எம் அரசியல் வாதிகளால் இற்றைவரை எதுவுமே செய்ய முடியவில்லை. சிவன் கண்ணீர் வடிக்கிறார். சிதறிய சடலங்கள் போல, சின்னாபின்னமாக்கப்பட்டுள்ள தெய்வச்சிலைகளைக் காணும்போது மனம் மிக வலிக்கிறது. இன்னும் ஏன் இப்படி அமைதியாக இருக்கின்றார்கள்? என்று தெரியவில்லை. இந்தக் காரியத்தைச் செய்தவர்கள் வாழ்நாள் பழிக்கு ஆளாகியுள்ளார்கள். தமக்கும் தம் சந்ததிக்கும் மாறாத பழியைத் தேடிக்கொண்டுள்ளனர். அழிக்கப்பட்ட சிலைகள் உடனடியாக நிறுவப்படவேண்டும். புதிய கோவில் உடனடியாக அமைக்கப்படவேண்டும். அழித்தவர்கள் உடனடியாக சட்டத்தின்முன் நிறுத்தப்படவேண்டும். வரலாறுகளை யாராலும் மாற்றி எழுதமுடியாது. அதேபோல இது பௌத்த நாடு என்ற மாயையில் இன்னும் இருப்பார்களேயானால் அது இன்னமும் அழிவுக்கே வழிவகுக்கும். இதனைவிட பெரும் அழிவை நாம் சந்திக்கிப்போகிறோம் என்பதனை உணர வேண்டும்.

உலகத்தில் வாழும் அத்தனை சைவர்களையும் மன விரக்திக்கு ஆளாக்கிய இந்தச்செயல் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சிய செயலாகவே காணப்படுகிறது.

ஆகவே சமயப் பெரியார்கள், சமய நிறுவனங்கள் மற்றும் குருமார்கள் சார்ந்த அமைப்புகள் விரைந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அல்லாது போனால் இந்தச் செயற்பாடுகள் தொடரும். அனைத்துக்கும் தீர்வு உடனடியாக காணப்படாது போனால் இன்னமும் நாம் இழக்கவென்று எதுவுமே இருக்காது. ஆக இன்னும் நாம் விழிக்காது இருப்பதானது, எம் சந்ததியை நாமே அழிப்பதற்கு வழி வகுத்தவர்கள் என்ற பழிக்கு ஆளாவோம். அதர்மங்கள் சில காலம் தம் அழிவுகளைத் தாமாகவே தேடிக் கொள்ளும். அதனைப் போலவே இவர்களும் தங்கள் அழிவுகளை காலம் வரும்போது தாமாகத் தேடிக்கொள்வார்கள் என்பது நியதி - என்றுள்ளது. (ம)





> வரலாறுகளை யாராலும் மாற்றி எழுதமுடியாது. அதேபோல இது பௌத்த நாடு என்ற மாயையில் இன்னும் இருப்பார்களேயானால் அது இன்னமும் அழிவுக்கே வழிவகுக்கும். இதனைவிட பெரும் அழிவை நாம் சந்திக்கப் போகிறோம் என்பதனை உணர வேண்டும்.



# வெடுக்குநாறிமலை ஆலய உடைப்பு கண்டனத்துக்கு உரிய பாதகச்செயல்

## ஆறு.திருமுருகன் காட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்திலுள்ள விக்கிரகங்களை உடைத்துள்ளமை கண்டனத்துக்குரியது. இலங்கையின் ஜனாதிபதி விக்கிரகங்களை உடைத்தமை குறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இலங்கை இந்துமாமன்ற உப தலைவரும், சைவத்தமிழ்ச் சொற்பொழிவாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

சைவமக்களின் தொன்மைகளை அழிக்கும் செயற்பாடு தொடர்கிறது. இது திட்டமிட்டு நடைபெறுகிறது. அரசாங்கம் இத்தகைய செயல்களை நிறுத்த வேண்டும். தொல்லியல் திணைக்களம் ஆதி சைவக்கோவில்களை சைவமக்கள் பராமரிப்பதற்கு தொடர்ந்து இடையூறு செய்வதும் வேதனைக்குரியது.

ஆலயத் திருப்பணி நடைபெறுவதற்கு இந்து கலாசாரத் திணைக்களம் உரிய அனுமதிகளை வழங்க வேண்டும். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். தொடர்ந்து சைவசமயத்துக்கு வரும் இன்னல்களைப் போக்குவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (ம-66)

# ஆலய அழிப்புக்கு காரணமானோரை உடன் சட்டத்தின்முன் நிறுத்துங்கள்

## சைவ மகாசபை கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் கோவில் சிலைகள் உடைக்கப்பட்டும், சிவலிங்கம் காணாமற் செய்யப்பட்ட செயலையும் வன்மையாகக் கண்டிக்கிறோம். இதற்குக் காரணமானவர்கள் கண்டறியப்பட்டு அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று இலங்கை சைவ மகாசபை கண்டித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

சிவலிங்கமும் சிலைகளும் மீள நிறுவப்பட வேண்டும். ஏற்கனவே கடந்த காலங்களில் சைவ சமயிகளின் வழிபாட்டுக்குப் பல இடையூறுகள் ஏற்படுத்தப்பட்ட பின்னணியில் இந்தச் செயல் மத நல்லிணக்கத்துக்கு ஊறுவிளைவிப்பதாகும்.

இதை உள்ளது உள்ளபடியாக உரிய நோக்கில் அணுகி அரசாங்கம் தீர்வொன்றை வழங்க வேண்டும்.

ஆதி சிவன் கோவில்கள் மீதான விரும்பத்தகாத தொடர் செயற்பாடுகள் தமிழ்ச் சைவர்களின் மனதை ஆழமாகப் பாதித்து வருகின்றது.

இந்த விடயத்தில் அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயலூக்கத்துடன் கூடிய எதிர்ப்பை வெளிக்காட்ட வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (ம-125-7-20-110)

# சமூகத் தளங்களில் கடும் கண்டனங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வெடுக்குநாறி மலையில் சிவன் கோவில் உடைக்கப்பட்டமைக்கு சமூக வலைத்தளங்களெங்கும் கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் கச்சதீவில் புத்தர்சிலையொன்று வைக்கப்பட்ட தகவல் வெளியானதைத் தொடர்ந்து, அது அகற்றப்படவேண்டும் என்றும் இலங்கையில் தொடரும் பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிரானதுமான குரல்கள் சமூக வலைத்தளங்களில் வலுத்திருந்தன. இந்த நிலையில், வெடுக்குநாறிமலை சிவன் ஆலயம் இடித்தழிக்கப்பட்டமையைத் தொடர்ந்து அரசாங்கத்துக்கு எதிராகவும் சிங்கள பௌத்த பேரினவாதச் சிந்தனைக்கு எதிராகவும் கண்டனக் குரல்களும் அது தொடர்பான பதிவுகளும் மிகையாக வலுத்துள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தில் யாழ்ப்பாணம் பாலைவனமாகும் சாத்தியம்!

## *வடக்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் சர்வராஜா எச்சரிக்கை*



**யாழ்ப்பாணம், மார்ச் 28**

**யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய வரமான நிலத்தடி நீரை மனித நடவடிக்கைகளால் மாசுபடுத்தி- நிலத்துக்கு கீழ் நீர் செல்லும் அனைத்து வழிகளையும் குறைத்து - நிலத்தடி நீரை தினமும் பயன்படுத்தும் அளவை நாங்கள் அதிகரித்து வருவதனால் எதிர்காலத்தில் உவர்த்தன்மை அதிகரித்து யாழ்ப்பாணம் பாலைவனமாகும் சாத்தியப்பாடு உருவாகி வருகின்றது. இது மிகப் பெரிய ஆபத்தான விடயம் - இவ்வாறு வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் ச.சர்வராஜா தெரிவித்தார்.**

உலக நீர் தினம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அதில் சிறப்புரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய வாழ்வுக்குப் பிரதான ஆதாரமாக உள்ள நிலத்தடி நீரை எங்கள் முன்னோர்கள் பொக்கிஷமாகக் கருதினர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை மிகப் பெரிய குளங்களை அமைப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. அந்த வகையில் நிலத்தடி நீர்தான் யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய வரம். நீரைச் சேமிப்பது, அதனை உரிய வகையில் பயன்படுத்துவது, நீரை மாசடையாமல் பாதுகாப்பது தான் நிலத்தடி நீர் முகாமைத்துவத்தின் அடிப்படை விதிகள்.

மழை பெய்தால் எந்தப் பகுதியை நோக்கி மழைநீர் அதிகளவில் ஓடிவருமோ அந்த இடத்தில் எமது முன்னோர்கள் குளத்தை அமைத்தார்கள். அந்தக் குளத்து நீரின் தூய்மையைப் பேணுவதற்கும், நீர் ஆவியாகுவதைத் தவிர்ப்பதற்காகவும் குளங்களைச் சுற்றி மருது, நெல்லி, நாவல் போன்ற மரங்களை நடுகை செய்தார்கள். குளங்கள் மாசுபடுவதைத் தடுக்க குள மரத்தடியில் பிள்ளையார் அல்லது அம்மன், முருகன் சிலையை வைத்தார்கள். விவசாயிகள் சூரியன் வர முதல் அதிகாலை வேளையில் இறைத்த நீர் முழுவதும் பயிர்களால் உறிஞ்சப்பட வழிவகை செய்தார்கள். பயிர்களுக்கு நீர் பாய்ச்சும்போது கிணறுகளில் நீர் ஊறவிட்டே இறைத்தார்கள். இவ்வாறு மிக உன்னதமான நீர் முகாமைத்துவத்தை எமது முன்னோர்கள் கைக்கொண்டனர்.

முற்காலத்தில் வீடுகளில் வரம்பு கட்டி மழைநீரைச் சேகரித்தனர். இன்று மழைநீர் சேகரிப்பை எங்கும் காணமுடிவதில்லை. தற்போது வீட்டைச் சுற்றிக் கொங்கிறீட் போடுகிறார்கள். காப்பெற் வீதிகள் அமைக்கிறார்கள். இதுபோன்ற செயற்பாடுகளால் மழைநீர் நிலத்துக்குக் கீழ் செல்லும் அனைத்து வழிகளையும் பெரும்பாலும் குறைத்துவிட்டோம். ஆயினும் நிலத்தடி நீரைத் தினமும் பயன்படுத்தும் அளவை நாங்கள் அதிகரித்துவிட்டோம். அத்துடன் நீர் மாசடையும் சூழலையும் நாங்கள் ஏற்படுத்திவிட்டோம்.

எங்களுடைய நாடு 103 ஆற்றுப் படுக்கைகளைக் கொண்டுள்ளது. வடமாகாணத்தில் 24 ஆற்றுப் படுக்கைகள் இருந்தன. ஆனால் இன்று நிலைமை மோசமாகியுள்ளது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ஓர் ஆறும் இல்லை என்பது துரதிர்ஷ்டவசமானதொரு நிலை. இங்கு பெரிய குளங்களை அமைப்பதற்கான வாய்ப்புக்களும் இல்லை. அந்தவகையில் நிலத்தடி நீரே யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய வரம். வரமாக வாங்கிய நீர் வளத்தை மனித நடவடிக்கைகளால் நாங்கள் மாசாக்கி சாபமாக மாற்றிவிட்டோம். இது மிகப் பெரிய ஆபத்தான விடயம்.

நகரப் பகுதிகளில் மலக் கழிவுகளாலும், பல பகுதிகளில் விவசாய நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படும் உரங்கள், கிருமிநாசினிகளால் நீர் மாசு, சுன்னாகத்தில் கழிவு எண்ணெய் காரணமாக நீர் மாசு, கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் உவர்நீரால் நீர் மாசு எனப் பல வழிகளாலும் நீர் மாசுபடுத்தப்பட்டுவிட்டது. இந்த நிலை நீடித்தால் எதிர்வரும் காலத்தில் உவர்த்தன்மை அதிகரித்து யாழ்ப்பாணம் பாலைவனமாகும் சாத்தியம் ஏற்படும். இதனை உணர்ந்து நாம் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும் - என்றார். (ச-66)



## ஆசிரியர் கலாசாலையில் உலக நீர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உலக நீர் தின நிகழ்வு கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் கலாசாலையின் பிரதான மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் தண்ணீர் நெருக்கடியை வெற்றி கொள்வது எப்படி? எனும் பொருளில் வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் எந்திரி ச.சர்வராஜா சிறப்புரை ஆற்றினார். அதனைத்தொடர்ந்து அவருக்குக் கௌரவிப்பும் இடம்பெற்றது. (ஒ-14-66)



பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருடனான நீர்வளம் சார்ந்த உரையாடல், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வஸ்பர் செயற்றிட்டம் ஊடாக இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது. (ம-14)

## தூக்கிலிருந்து சடலம் மீட்பு!

சாவகச்சேரி, மார்ச் 28

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இளைஞரொருவரின் சடலமொன்று தூக்கிலிருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளது. அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குளமொன்றுக்கு அருகில் உள்ள மரத்திலிருந்தே மேற்படி சடலம் மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14,159,9)

# இடமாற்ற சபைக் கலைப்பு ஜனநாயகத்துக்கு விரோதம்

## *இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு*

கொழும்பு, மார்ச் 28

கொள்கைக்கு மாறாக, தேசிய ஆசிரிய இடமாற்ற சபையைக் கலைத்தமை ஜனநாயகத்துக்கு விரோதமானது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தேசிய ரீதியில் நடைபெறுகின்ற ஆசிரிய இடமாற்றங்களில் பல்வேறு குறைபாடுகள் மோசடிகள் நடைபெறுவது தொடர்பில் கடந்த காலங்களில் நாம் கல்வி அமைச்சிடம் முறைப்பாடுகளை முன்வைத்திருந்தோம். அவை எவற்றுக்குமே எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கைக்கு மாறாக ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெறுவதும், அதைக் கருப்பொருளாக வைத்து பலர் இலஞ்சம் பெறுவதும் அதிகரித்துள்ளன.

சிலர் இதன்மூலம் லட்சக்கணக்கான பணத்தை ஆசிரியர்களிடம் பெற்றமை எம்மால் நிரூபிக்க முடியும். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் எந்தவொரு சபை உறுப்பினரும் லஞ்சம் பெற்றதற்கான ஆதாரம் இருக்குமானால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கையை முதலில் நாம் எடுப்போம். ஆனால் எமது சங்கத்தில் அதுபோன்ற லஞ்சம் பெறும் உறுப்பினர்கள் எவரும் இல்லை என்பதை உறுதியாக உரைக்க முடியும். இது போன்ற லஞ்சம் பெறும் குற்றவாளிகளைக் கட்டுப்படுத்துவதை விட்டுவிட்டு இடமாற்ற சபையைக் கலைப்பது ஜனநாயகத்துக்கு விரோதமானது. இதனால் பாதிக்கப்படுவது ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவர்களுமே. எனவே, தாங்கள் எடுத்துள்ள முடிவை மாற்றி ஆசிரிய இடமாற்ற சபையானது சுயாதீனமாகவும் தூய்மையாகவும் நடைபெற ஆவன செய்யுங்கள். கல்வியில் இடையூறுகள் ஏற்படுவது மாணவர் கல்வியை மட்டுமல்லாது ஆசிரியர்களின் மனங்களையும் புண்படுத்தும் - என்றுள்ளது. (ம-14,20)



## கிளிநொச்சிசாலைக்கு இ.போ.ச. தலைவர் பயணம்

கிளிநொச்சி, மார்ச் 28

இலங்கைப் போக்குவரத்துசபைத் தலைவர் அல்விஸ், கிளிநொச்சிசாலைக்கு கண்காணிப்பு விஜயமொன்றை அண்மையில் மேற்கொண்டார்.

கிளிநொச்சிசாலையில் நிலவும் தேவைப்பாடுகள் மற்றும் ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் நோக்குடன் அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டார். (ம-14,113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.12.1957 | 27.03.2023 |

## செல்லையா திருச்செல்வம்

**சிமெந்து தொழிற்சாலை K.K.S,**
(University of Jaffna Maintenance Branch

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் சுதுமலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா திருச்செல்வம் நேற்று (27.03.2023) திங்கட்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற செல்லையா -அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வடிவேலு - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், கௌரியின் அன்புக் கணவரும், சதுர்கஸ்தன், ஜீவனா, தனகஸ்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவராசா, கமலாம்பிகை, காலஞ்சென்ற சாந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வேல்தாஸன், சூரியதாஸன், நளினி, தர்மினி, பாக்கியதாஸன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுரேக்கா, நிரேக்கா, நேமிகா (அமரர்), இந்துஷன், பிரசன்னா ஆகியோரின் அன்பு மாமனாரும், புஷ்கரா, கானசதுர்னன் ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுதுமலை மேற்கு, மானிப்பாய்.**
**076 5604711**

**தகவல்:**
**மகன் - தி.சதுர்கஸ்தன்.**

(CS 22553) 1/6

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06.01.1956 | 27.03.2023 |

## மரியாம்பிள்ளை ஸ்ரனிஸ்லோஸ்

(செபஸ்ரியாம்பிள்ளை)

வெற்றிலைக்கேணியை பிறப்பிடமாகவும், செம்பியன்பற்று வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை ஸ்ரனிஸ்லோஸ் (செபஸ்ரியாம்பிள்ளை) அவர்கள் நேற்று (27.03.2023) திங்கட்கிழமை இறைபதமடைந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி மரியாம்பிள்ளை பார்பறம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கஸ்பார் பத்திரிசியா ஆகியோரின் மருமகனும், மேரிஜறிஸ் (ராசாத்தி) அவர்களின் அன்புக் கணவரும், நிமல்ராஜ் (லண்டன்), விமல்ராஜ் (லண்டன்), காலஞ்சென்ற திலீபராஜ், பிலிப் அமல்ராஜ் (லண்டன்), ஸ்ரீபன்ராஜ், அருள்ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பெனடிக்றா (லண்டன்), மதுமிதா (லண்டன்), சுபத்திரா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், ஆன்சன், அன்றுசன், ஏஞ்சல், மிதன், ரிதன் ஆகியோரின் பேரனும், யோசேப்பு, செபமாலை, செல்வன் (பிரான்ஸ்), துரை (கனடா), மதுரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான அருட்பணி ஜோண் லொறட், றொசாறியோ (ராசா), அல்பிரட், றஜனி, குமுதா, றீகன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின், பூதவுடல் முத்துமாரி அம்மன் கோவில் வீதி, 2ஆம் ஒழுங்கை கொழும்புத் துறையிலிருந்து 29.03.2023 புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, செம்பியன்பற்று வடக்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டு, வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் இறுதி திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதைத் தொடர்ந்து புனித பிலிப்பு நேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2ஆம் ஒழுங்கை, முத்துமாரி அம்மன் கோவிலடி,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**
**ஸ்ரீபன்ராஜ் (மகன்) - 077 1999 684**
**றீகன் (மைத்துனர்) - 077 6033 304**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 22552) 1-6

# மரண அறிவித்தல்

## திருமதி தனபாலசிங்கம் யோகாம்பிகை (நயினாதீவு)



தோற்றம் : 05.05.1942 மறைவு : 25.03.2023

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கொக்குவில், கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் யோகாம்பிகை அவர்கள் கடந்த (25.03.2023) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தனபாலசிங்கம் (முன்னாள் S.A-Srilanka Telecom) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், முத்தம்மா மற்றும் கமலம் ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான மாலா, செல்வகுமார், ஜெயக்குமார் மற்றும் பிறேமா, வசந்தகுமார், சுரேஷ்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசநாயகம், சசிகலா, குகசீலன், ஜஸ்மின், நந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா கோவிந்தபிள்ளை, விசாலாட்சி, பொன்னுத்துரை, நல்லதம்பி, சிதம்பரம், நடராசா மற்றும் செல்லம்மா, சிவக்கொழுந்து, வரலட்சுமி (பூலோகம்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான முத்துவேலு, தனலட்சுமி, சுந்தரமூர்த்தி, கந்தசாமி, திருவருட்செல்வி, பரமேஸ்வரி, முத்துலிங்கம், யோகநாதன், சதர்மதேவா, ரஞ்சன் மற்றும் தனலட்சுமி, ஜீவாநந்தன், வேலாயுதம், செல்வராஜா, சரோஜினிதேவி, கிருஷ்ணகுமாரி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் தனலட்சுமி, காந்திமலர், இதயரசனி, பாலசுப்பிரமணியம் இராசபாலன் ஆகியோரின் சகலியும், சுபாங்கி, மேகலன், தனுசியா, திவேனிகா, சங்கவி, ஹர்சன், சங்கீரன், தரண்யா, நக்கீரன், மதுரன் ஆகியோரின் பேர்த்தியும், ருத்ராவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (30.03.2023) வியாழக்கிழமை அவரது பெறாமகன் சு.நவநேசன் (ஈசன்) அவர்களின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.123/13, G.P.S. வீதி,**
**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

செல்வராசா (இலண்டன்)-071 132 5453
சுரேஸ்குமார் (பிரான்ஸ்)-0033646748152
077 9874 060
பிறேமா - 077 914 8743
நவநேசன் - 077 6910 634

(CS 22551) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பலஸ்தீனமும் இலங்கையும்!

உலகத்தில் போர்களின் பூமி என்று அறியப்படுவது பலஸ்தீனம். பள்ளிக் குழந்தைகள் பேனா பிடிப்பதற்குப் பதிலாக, கவண்களில் கற்களை வைத்து வீசுவதற்குத்தான் அங்கு பழக்கப்படுகின்றனர். கோலியாத்தை எதிர்த்த தாவீதாக இஸ்ரேல் இராணுவத்தின் அடக்குமுறைகளையும் அதன் யூத சித்தாந்தச் சிந்தனைகளையும் அவர்கள் எதிர்த்து நிற்கின்றனர். 1940களில் பரந்து விரிந்திருந்த பலஸ்தீனம் இன்று குறுகிக்குறுகி அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் அடையாளப்படுத்தப்படுகின்றது. இந்த அடக்குமுறைகளும், ஆக்கிரமிப்பு மனோநிலைகளும், பலஸ்தீன வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்படுவதும், மனித உரிமைகளைத் துச்சமெனக் கருதிய கைதுகளும்தான் 'போர் மலிந்த பூமியாக' இன்று பலஸ்தீனத்தை மாற்றியிருக்கின்றது. பலஸ்தீனர்களும், அவர்களின் ஆதரவு பெற்ற ஹமாஸ் போராளிகளும் மிகமோசமான வகையில் இப்போதெல்லாம் எதிர்வினையாற்றுகின்றனர். மத்திய கிழக்கில் பலஸ்தீனம் எவ்வாறோ அவ்வாறுதான் ஆசிய வட்டகையில் இலங்கை.

தமிழர் தாயகத்தில் தொல்லியல் பகுதிகளாக இன்று அடையாளப்படுத்தப்பட்டவற்றில் 90 சதவீதத்துக்கும் அதிகமானவை தமிழர்களின் பாரம்பரிய நிலப்பகுதிகள். ஆனால், இந்தப் பாரம்பரியத்தை – தொல்லியலை – தொன்மைமிகு வரலாற்றைத் திரித்து – அழித்து – புனைந்து அதைச் சிங்கள பௌத்தத்துக்குரியதாக மாற்றிவிடவேண்டும் என்பதில் 'பௌத்த பேரினவாதம்' காலம் காலமாகவே தீவிரம் கொண்டிருக்கின்றது. வெடுக்குநாறிமலையில் அமைக்கப்பட்டிருந்த சிவலிங்கமும் இதர தெய்வங்களின் உருவச்சிலைகளும் அடியோடு பெயர்த்தெடுக்கப்பட்டு உடைத்துச் சிதிலப்படுத்தப்பட்டமை இதன் ஆகப்பிந்தியதும் பெரியதுமான சான்றே. கச்சதீவில் விகாரையொன்று அமைக்கப்படுவதாக ஒளிப்படங்களை வெளியிட்டு சிந்தனை மடைமாற்றத்தை ஏற்படுத்திவிட்டு மறுபுறம் வெடுக்குநாறி மலையில் தன் தாண்டவத்தை ஆடியிருக்கின்றது பௌத்த பேரினவாதம்.


இலங்கையும் இனவாதமும் இரண்டறக் கலந்தவை. அவை எக்காலமும் ஒன்றிலிருந்து இன்னொன்று பிரிக்கப்பட முடியாதவை என்ற செய்தியைத்தான் 'பொருளாதாரப் பேரிடரின் பின்னரான' இந்த அதியுத்த மதத் தாண்டவம் கட்டியம் செய்கின்றது. வெடுக்குநாறி மலையில் மேற்கொள்ளப்பட்ட மதத் தாண்டவத்தின் பின்னர் ஒருவிதப் பதற்றநிலைமை தமிழர் தாயகத்தை ஆட்கொண்டிருப்பதைவெளிப்படையாகவேஅவதானிக்கமுடிகின்றது. போராட்டங்கள் பரவலாக ஆரம்பித்திருக்கின்றன. கொஞ்சம் கொஞ்சமாக தன் இயல்பான அமைதி நிலையை தமிழர்தாயகம் இழந்துகொண்டே வருகின்றது. உண்மையில், தமிழர் தாயகத்தின் இவ்வாறான பதற்றமும் பரபரப்பும் முடிவிலியாக நீள்வதைத்தான் பேரினவாதம் நேசிக்கவும் செய்கின்றது. நீதிமன்ற உத்தரவை மீறிய வகையில் குருந்தூரில் விகாரை கட்டப்பட முடிகின்றதென்றால், வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயம் பெயர்த்தெடுத்துச் சிதிலமாக்கப்பட்டு வீசப்பட முடிகின்றதென்றால் இதற்கெல்லாம் காரணம் என்ன? பாதுகாப்புப் படையினரினதும் அரசாங்கத்தினதும் அனுசரணை இல்லாமல் இதையெல்லாம் செயற்படுத்தமுடியுமா?

இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் 'உண்மையைக் கண்டறியும் குழு' தொடர்பான புரிதலை ஏற்படுத்துவதற்காகவும் தென்னாபிரிக்காவுக்குக் குழு அனுப்பும் அரசாங்கம், பலஸ்தீனமும், காஸா முனையும், மேற்குக் கரையும் (வெஸ்ட் பாங்) தம் இயல்பான அமைதியை இழந்து தவிப்பதற்கு என்ன காரணம் என்றறிய முற்படவேண்டும். இங்கே வேடிக்கை என்னவென்றால், பலஸ்தீனத்துக்காகக் குரல்கொடுக்கும் உலகின் மிகச்சொற்பமான நாடுகளில் இலங்கையும் ஒன்று. இதற்காக இலங்கைத் தலைவர்களுக்கு பலஸ்தீனம் விருதுகள்கூட வழங்கியிருக்கின்றது. ஆக, பலஸ்தீனத்தில் யூதர்களின் ஆக்கிரமிப்பை, அத்துமீறலை புரிந்து – தெளிந்து அதற்காகக் குரல் கொடுக்கும் சிறிலங்கா, தான் என்ன மனோநிலையில் தமிழர்கள் விவகாரத்தையும் தமிழர்களுக்குரிய தொன்மைத் தேசங்களையும் கையாள்கின்றது என்பது புரியாமை இருப்பதெல்லாம் ஆச்சரியத்தின் உச்சம்தான்.

**நாளொரு நல்வார்த்தை**

"இவ்வுலக வாழ்க்கையில் சம்பாதித்துக் கொள்ளவேண்டிய குணங்கள் எல்லாவற்றிலும் மிகமிக உயர்ந்தது பொறுமை"

– மகாகவி பாரதியார்




# கோத்தாபயவை பெரமுனவினர் ஜனாதிபதியாக்கியமை தவறே!

*அவரிடம் அமைச்சைப் பெற்ற பவித்ரா இவ்வாறு தெரிவிப்பு*

**கொழும்பு, மார்ச் 28**



**அரசியல் அனுபவமற்ற கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்தமை பொதுஜன பெரமுன செய்த பெரும் தவறு என்று பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரான அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.**

பண்டாரகம பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் பவித்ரா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ரணில் விக்கிரமசிங்க அனுபவமுள்ள அரசியல்வாதி. சிறந்த சர்வதேசத் தொடர்பும் அவருக்குள்ளது. இவை உள்ளிட்ட காரணிகளைக் கருத்திற்கொண்டே அவரை ஜனாதிபதியாக்குவதற்கு நாம் ஆதரவு வழங்கினோம். அரசியல் ரீதியில் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் எமக்கு விமர்சனம் இருந்தது. பல்வேறுபட்ட விமர்சனங்களையும் முன்வைத்திருந்தோம். ஆனால் அவை தனிப்பட்ட பிரச்சினைகள் அல்ல. அரசியல் ரீதியிலானவை. மஹிந்த ராஜபக்ச தலைமையில் நாம் சிறப்பாகச் செயற்பட்டோம். பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம். ஆனால் ஓர் இடத்தில் தவறிழைக்கப்பட்டது. அதுதான் அரசியல் அனுபவமற்ற கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக்கியது'- என்றார். (ம-44)

# ஜனாதிபதித் தேர்தலின்போது ஐ.தே.க.வுடன் கூட்டணியில்லை

*பெரமுனவின் பொதுச்செயலர் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணியமைத்துப் போட்டியிடத் தீர்மானிக்கவில்லை என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ளோம். அரசியல் கொள்கை ரீதியில் இரு தரப்புக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பொதுஜன பெரமுன கொள்கை அடிப்படையில் செயற்படும். உள்ளூராட்சிமன்றத்தேர்தலைத் தடுக்க பொதுஜன பெரமுன அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகித்ததாக எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவது அடிப்படையற்றது. நாளை தேர்தல் இடம்பெற்றாலும் போட்டியிடத் தயாராகவுள்ளோம். உள்ளூராட்சிமன்றத்தேர்தல் இழுபறி நிலையில் உள்ள பின்னணியில் தற்போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அரசமைப்பின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்கு பின்னரே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். ஆகவே ஜனாதிபதித் தேர்தல் குறித்து தற்போது அவதானம் செலுத்துவது அவசியமற்றது - என்றார். (ம)

**நாளை**

**29.03.2023**

**புதன்கிழமை**

**பங்குனி 15**

| | |
|---|---|
| சுபநேரம் | : 04.43 - 06.13 |
| ராகுகாலம் | : 12.13 - 01.43 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி குடும்பமட்ட முன்பள்ளிகளின் மெய்வன்மை நிகழ்வு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்த விளையாட்டு நிகழ்வில், பூவேந்தன் முன்பள்ளி, பாரதி முன்பள்ளி, உதய சூரியன் முன்பள்ளி, பண்டிதமணி முன்பள்ளி, தேனுஜா முன்பள்ளி, அம்பாள் முன்பள்ளி மற்றும் தூய தோமஸ் முன்பள்ளி ஆகிய முன்பள்ளிகள் பங்கேற்றன.

நிகழ்வில், போட்டிகளில் வெற்றியீட்டிய மழலைகளுக்கான பரிசுகள் வழங்கப்பட்டன. (ய-159)



மிருசுவில் - உசன் இராமநாதன் மகா வித்தியாலய இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டிகள் வித்தியாலய மைதானத்தில் கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ய-9)



சர்வதேச மகளிர் தின நிகழ்வு மறவன்புலோ மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கு.கருணாதேவி தலைமையில் மறவன்புலோ அன்பு உற்பத்தி நிலைய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ய-159)



அளவெட்டி தெற்கு அ.மி.த.க. பாடசாலையில் அதிபராகப் பணியாற்றி பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் சென்ற செ.சுதாகரனுக்கு பிரிவுபசார நிகழ்வும் கௌரவிப்பும் மேற்படி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களால் அண்மையில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் ஜெ.நிரஞ்சனாவால் வாழ்த்துப் பத்திரம் வழங்கப்பட்டது. அத்துடன் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ய-36)



அவுஸ்திரேலியா மன்னார் எயிட் குரூப் நிதி அனுசரணையுடன் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் ஊடாக நானாட்டான் பிரதேசசெயலாளரின் சிபாரிசுடன் பொருண்மியம் நலிவுற்ற தெரிவுசெய்யப்பட்ட 26 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

இதில் சுண்டிக்குளி, செம்மண்தீவு, செட்டியார் கட்டையடம்பன், இரட்டைக்குளம், மடுக்கரை, பள்ளங்கோட்டை, கற்கடந்தகுளம், புத்திரக்கண்டல், எருதுவிட்டான், அச்சங்குளம். அருவங்குன்று மற்றும் ராசாமடு ஆகிய கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்டவர்களே இதில் பயன்பெற்றனர். (ய-60)



சாவகச்சேரி பாரதி முன்பள்ளிச் சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா முன்பள்ளி முன்றிலில் அண்மையில் இடம்பெற்றது. (ய-9)



மருந்துத் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு வட்டுக்கோட்டைப் பிரதேச மருத்துவமனைக்கு ஒரு தொகுதி அத்தியாவசிய மருந்துகள் கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து வரும் கொக்குவில் பொற்பதி கிராமத்தைச் சேர்ந்த ராஜி குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் கொக்குவில் பொற்பதி கிராமமக்கள் சார்பில் கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையத் தலைவர் கணேசலிங்கம் பிரசாந், கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையச் செயலாளர் க.ராகுலன் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டு குறித்த அத்தியாவசிய மருந்துப் பொருள்களை மேற்படி மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி ரதினி காந்தநேசனிடம் நேரடியாகக் கையளித்தனர். (ய-66)



கொடிகாமம் பிரதேச மருத்துவமனைக்கு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் நீரிழிவு, இரத்தஅழுத்தம் மற்றும் கொலஸ்ரோல் ஆகிய நோயாளர்களுக்கான அத்தியாவசிய மருந்துப் பொருள்களை கடந்த 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் க.சிவநிதன் தலைமையிலான வர்த்தகர்கள் மருத்துவமனைக்கு நேரடியாகச் சென்று மருந்துப் பொருள்களை மருத்துவமனைப் பொறுப்பதிகாரியிடம் கையளித்தனர். (ய-9)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேசசெயலக சிறுவர் பெண்கள் பிரிவினால் கோயிற்குடியிருப்பு மற்றும் தனங்களப்பு பிரிவுகளில் ஆரோக்கியமான குடும்பம், சிறுவர் பாதுகாப்பு மற்றும் இளவயது திருமணம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. (ய-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்கோள் விழா

வட்டுக்கோட்டை, மார்ச் 28

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா இன்று செவ்வாய்க்கிழமை மு.ப.10.30 மணிக்கு பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஜெ.கோகுலவாசன் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை முன்னாள் அதிபர் திருமதி சிவமலர் சுந்தரபாரதி கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ)

# அலங்கார உற்சவம்

வட்டுக்கோட்டை, மார்ச் 28

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் திரு அருள்மிகு கண்ணியம்மன் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தேர் உற்சவமும், 10 திகதி திங்கட்கிழமை ஆலய பித்தர் கேணியில் மாலை 5 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பசுந்தேசம் அமைப்பின் ஒழுங்கமைப்பில், யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவும் கைதடி சித்த போதனா வைத்தியசாலையும் இணைந்து நடத்திய 'ஆரோக்கியமான பெண்கள் சமுதாயம்' எனும் தொனிப் பொருளில் இலவச விழிப்புணர்வு மருத்துவ முகாம் கைதடி அன்னை இரத்தினம் மணிமண்டபத்தில் கடந்த 18ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. (ய-159)


## றோயல் நெய்

சாப்பிடும் சாப்பாடு சுத்தமாக இருக்க வேண்டும் என நினைக்கின்றோம். ஆனால் நல்ல மணமாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்றோமா? அப்படி மணமாக இருந்தாலும் பரவாயில்லை தரமாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்றோமா? சுத்தமான நெய் என்று நினைத்து பொய் பொய்யா நெய் வாங்கி ஏமாந்த காலம் போதும் அசல் நெய்யோட தரமும் மணமும் எப்படி இருக்கும் என்று நாங்கள் சொல்லித்தருகின்றோம்.

தரமான சுத்தமான நெய் பற்றி நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்



ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப் படுகின்ற உடலுக்கு ஆரோக்கியமான அறுசுவை சமையலுக்கு ஏற்றதான சுத்தமான நெய் எங்கள் றோயல் சுத்தமான நெய்.

தரம் மணம் நிரந்தரம். றோயல் நெய் எப்பவுமே முதற்தரம்

ஏக விநியோகஸ்தர்,
சிவா நறுமண பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சத்திரச் சந்திக்கு அருகாமையில்)

Packed By : Royal Industries ®
தொலைபேசி : 021 222 2567

(CR 39483)(3/6)


# யாழ். விஞ்ஞான சங்கத்தின் வருடாந்த அறிவியல் அமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் 29ஆவது வருடாந்த அறிவியல் அமர்வு நாளை, நாளைமறுதினம் மற்றும் எதிர்வரும் 31ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

'பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் மாற்று தொடர்பாடலுக்கான தந்திரோபாயங்களைக் கண்டறிதல்' எனும் தொனிப்பொருளில் இந்த அறிவியல் அமர்வு இடம்பெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வில் பேராசிரியர் வேல்நம்பி 'யாழ்ப்பாணத்தில் வணிக நிறுவனங்களின் சவால்களை எதிர்கொள்ளல்' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். சிறப்புச் பேருரை அமர்வுகள், கருப்பொருள் ஆய்வமர்வுகள் மற்றும் ஆய்வுக் கட்டுரை அமர்வுகள் என்பன தொடர்ந்து மூன்று நாள்கள் இடம்பெறவுள்ளன. (ச)


## நண்பர்களின் இதய அஞ்சலி



தோற்றம்
08.09.1952

மறைவு
27.03.2023

## இளையதம்பி சண்முகதாசன்
(அப்பன் அண்ணன்)

எமது ஆலய தொண்டர்களான சண்முகதாசன், பிரதீபன், சண்முகதாசன் ஜனோஜன், Dr. சண்முகதாசன் கார்த்திகன் ஆகியோரின் அன்புத் தந்தையாகிய இளையதம்பி சண்முகதாசன் நேற்று (27.03.2023) காலமாகிவிட்டார். அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில் தொண்டர்கள்



## வீடு வாடகைக்குத்தேவை

முதியோரை வைத்து பராமரிப்பதற்காக 3 / 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்குத்தேவை.

070 134 8384

(ம 22539)(2-6)



## கனடா நாட்டில் குடியேறுவது உங்கள் கனவா?

இலங்கையின் பிரசித்திபெற்ற கனடா விசா ஆலோசகர்களும், நம்பகரமான முகாமையாளர்களும் சிறப்பாகப் பங்கு பெறும் யாழ். கல்விக் கண்காட்சிக்கு வருகை தந்து உங்கள் கனடாக் கனவை இலகுவாக, விரைவாகச் சட்ட ரீதியாக நனவாக்கிடுங்கள். உங்களுக்கு இலவசமான தனிப்பட்ட ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் முற்றிலும் இலவசமாய் வழங்கப்படும்.

- Student visa
- Work visa
- Skilled migration visa Jaffna Education Fair 2023 ஏப்ரல் 1 ஆம் 2 ஆம் திகதிகளில்/ யாழ்ப்பாணம், வலம்புரி ஹோட்டலில் 9.00 am to 6.00 PM

மேலதிக விளக்கங்களுக்கு :
0778866832
0773436927

CR 39544 1-6


# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

அளவெட்டி தெற்கு நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை விளக்கு வைத்தல் வழிபாட்டுடன் ஆரம்பமாக வுள்ளது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ள உற்சவம் இறுதியாக எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை சங்காபிஷேகத்துடனும் மாலை வைரவப் பெருமானின் வீதி உலா வருதலுடனும் நிறைவுபெறும் என ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (ம-14,63)

# ஆஞ்சநேயர் கோயிலில் சனீஸ்வர சாந்தி ஹோமம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

இணுவில் மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயிலில் சனீஸ்வர சாந்தி ஹோமம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகவுள் ளது.

அடியவர்கள் அபிஷேகம், ஹோமம், பூசை, அர்ச்சனை வழிபாடு களில் இணைந்து பயன்பெற்றுக் கொள்ளுமாறு ஆலயநிர்வாக சபை அறிவித்துள்ளது. (ம-14)


## விற்பனைப் பிரதிநிதி தேவை

யாழ். மாவட்டத்தில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றிற்கு யாழ். மாவட்டத்திற்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் விற்பனை பிரதிநிதி தேவை.

முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது

தொடர்புகளுக்கு:
S.V. முருகேசு
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**கனகரத்தினம்**
**சுரேஸ்குமார் (சுரேஸ்)**
(பணியாளர், புதுக்குடியிருப்பு ஆதாரவைத்தியசாலை)
பிறப்பு 16.08.1976 இறப்பு 28.03.2009

**கந்தையா**
**ஜெயக்குமார் (ஜெயம்)**
பிறப்பு 17.05.1984 இறப்பு 13.03.2009

என் வாழ்வின் உயிரே....
சிறு கனவுகளும் பயணமும் என் வாழ்வு
என எண்ணியவேளை கண்ணீரே
நிரந்தரம் எனப் புரிய வைத்துவிட்டீர்
ஆயிரம் உறவுகள் அருகில் இருந்தாலும்
அப்பா என்ற உறவு இல்லை
என்றாகியதால் அனாதையாகிவிட்டேன்....

புன்னகை பூத்த எம் உறவே
நீயின்றி எம் இல்லத்தில் இருள்
சூழ்ந்துவிட்டதடா.... எம் கண்கள்
உன்னைத் தேட
இப்பூவுலகை விட்டகன்றாயே.........

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி சு. பரிமளம் (மதி) அப்பா, அம்மா, சகோதரங்கள்
தாவளை, இயற்றாளை, வரணி.

# மரண அறிவித்தல்



## திருமதி மகாலிங்கம் சுலோசனாதேவி

தோற்றம் 08.02.1965 மறைவு 26.03.2023

யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், நாவலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாலிங்கம் சுலோசனா தேவி கடந்த (26.03.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை (பொன்னுத்துரை) - இராசமணி தம்பதிகளின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், மகாலிங்கத்தின் அன்பு மனைவியும், நிரோசன், நிவாசன், கிரிசோபன், திலக்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவாஜினி, கஜலக்ஷி, சிவகாமினி ஆகியோரின் மாமியும், பத்மாதேவி, மகாலிங்கம், சாரதாதேவி, யோகேஸ்வரி, றஞ்சினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், குலேந்திரன், லலிதா, விக்னேஸ்வரன், றஞ்சினி, சிறிகாந்தன், வசந்தா, பாமினி, மகேந்திரன், அமிர்தவல்லி, காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் குணசிங்கம், குவேந்திரநாதன் ஆகியோரின் மைத்துனியும், றஞ்சிதமலர், முகாலிங்கம், றஞ்சினி, கருணாகரன், மாலினி, நந்தகுமார், காந்தரூபன் ஆகியோரின் சகலியும், தருண்ஜா, காருஷ்சன், கஜீஷ், அஷ்ரித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2023) புதன்கிழமை வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வன்னியசிங்கம் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு.**
(CS/22544)4,6
**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 433 1972**

# மரண அறிவித்தல்



## பொன்னம்பலம் திருவாதிரை

(இளைப்பாறிய தபால் அதிபர்)

காரைநகர் விளானையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் திருவாதிரை நேற்று (27.03.2023) திங்கட்கிழமை மதியம் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற காங்கேசு இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற யோகேஸ்வரியின் (ஓய்வுநிலை தாதிய உத்தி யோகத்தர்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான A.G.A. பால சிங்கம், ஈஸ்வரி, வள்ளியம்மை ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற வர்களான பாலசுப்ரமணியம், சிவபாக்கியம், ஒப்பிலாமணி அவர்களதும், சரஸ்வதியினதும் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2023) செவ்வாய்க்கிழமை அவரது விளானை இல்லத்தில் காலை 7.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக களபூமி, தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விளானை, களபூமி,**
**காரைநகர்.**
**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(CR 39543) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 09 . 1952



மறைவு 27 . 03 . 2023

## திரு.இளையதம்பி சண்முகதாசன்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு. இளையதம்பி சண்முகதாசன் நேற்று (27.03.2023) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - இராசமணி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரரும், காலஞ்சென்ற நடராசா - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், மணியின் அன்புக் கணவரும், பிரதீபன் (பிரான்ஸ்), ஜனோஜன் (J-Tune Shop), Dr. கார்திகன் (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், தமிழ்ச்செல்வி (பிரான்ஸ்), சன்சிகா, Dr.விநோதா (T.H.J) ஆகியோரின் அன்பு மாமனாரும், சத்தியராணி (ஜேர்மனி), தேவராணி (இலண்டன்), தேவதாசன் (ஜேர்மனி), ஸ்ரீதாசன் (ஜேர்மனி), கவிதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சகோதரரும், பிரதீகா, கவீன், ஆருத்ஸன் ஆகியோரின் பேரனும், விமலாதேவி (கனடா), ராகினி (பொதுசன நூலகம் - யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற நவபாலசிங்கம், செல்வேந் திரன் (லண்டன்), கனகாம்பிகை (லண்டன்), ரகுலா (ஜேர்மனி), ஜாழினி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.30 மணியள வில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்மன் வீதி, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**
**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(CS 22547) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எலி கடித்த உணவுகள்: களஞ்சியப்படுத்தி விற்ற உணவகத்துக்குத் தண்டம்

மன்னார், மார்ச் 28

மன்னார் நகரில் சுகாதாரமற்ற முறையில் மனிதநுகர்வுக்கு பொருத்தமற்ற, எலி கடித்த உணவுகளை விற்பனைக்கு வைத்திருந்த உணவகத்துக்கு நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

உணவகத்தில் மனிதப் பாவனைக்கு பொருத்தமற்ற எலிகடித்த உணவுகள் களஞ்சியப்படுத்தப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு தகவல் வழங்கப்பட்டது. தகவலுக்கமைய மன்னார் சுகாதார பரிசோதகர் தலைமையில் உணவகம் பரிசோதிக்கப்பட்டது. அப்போது பல்வேறு சுகாதாரக் குறைபாடுகள் இனங்காணப்பட்டதுடன் எலிகடித்த உணவுகள் களஞ்சியப்படுத்தி விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டதையடுத்து உணவகத்துக்கு எதிராக 5 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு மன்னார் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதற்கமைய உணவக உரிமையாளருக்கு 70 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் தவறும் பட்சத்தில் ஒவ்வொரு குற்றத்துக்காகவும் 3 மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

அத்துடன் நாளை 29ஆம் திகதிவரை குறித்த உணவகத்துக்கு வியாபாரத் தடை விதித்தும் நீதிமன்று கட்டளை பிறப்பித்தது. (ச-213)

## அராலியில் விபத்து: ஒருவர் படுகாயம்!



யாழ்ப்பாணம், மார்ச் 28

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி பாலத்தில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சுரேஷ்குமார் நிக்சன் (வயது- 27) என்பவரே காயமடைந்தவராவார்.

அராலி வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கு வேலைக்குச் சென்று கொண்டிருந்த வேளை யாழ்ப்பாணத்தில் இருந்து அராலி நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில் படுகாயமடைந்த நபர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14)


50

திறன் வாய்ந்த வர்த்தக நகரமாக அடையாளம் காணப்பட்டது...



கி.பி 1344 இல் மொராக்கோ பயணியான இபின் பதூதா இலங்கையில் தரையிறங்கி நாடு முழுவதும் பயணம் செய்த அவர் தனது குறிப்பில் யாழ்ப்பாணத்தைப் பற்றியும் எழுதினார். இந்த நகரம் மிகவும் திறமையான வர்த்தக நகரமாக இருந்தது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இபின் பதூதா அப்போது பார்த்தது போலவே, யாழ்ப்பாணத்தின் வணிக மறுமலர்ச்சிக்காக அங்குள்ள மக்கள் நன்கு அறியப்பட்டவர்கள்.

அந்த மகிமையை மேலும் ஒளிரச் செய்ய தேவையான நிதித் தீர்வாக இருக்க, யாழ்ப்பாணத்தில் திறக்கப்படும் எமது நான்காவது கிளையாக

சிங்கர் ஃபினான்ஸ்

வெற்றிகரமான 50 வது கிளை

எமது 50 வது திறப்பு விழா யாழ்ப்பாணம் 462 A, வைத்தியசாலை வீதியில் பெருமைக்குரிய கிளையாக திறந்து வைக்கப்படவுள்ளது. இபின் பதூதா மிகவும் திறமையான வர்த்தக நகரத்தை அன்றே இனங்கண்டார். அதற்கு வலுவூட்ட எங்களுடன் கைகோர்க்க உங்களை அழைக்கிறோம்.

011 2 400 400

The World Of Hayleys

SINGER FINANCE

ஹேலிஸ் குழுமத்தின் உறுப்பு நிறுவனம்

E-mail: financecompany@singersl.com | Web: www.singerfinance.com | Facebook: SingerFinancePLC


### நோபல் பரிசுக்கு மோடி தகுதியற்றவர்

## அரிக்கன் லாம்பு ஏந்தி வவு.வில் போராட்டம்

வவுனியா, மார்ச் 28

நோபல் பரிசை பெறுவதற்கு மோடி தகுதியற்றவர் எனத் தெரிவித்து அரிக்கன் லாம்பை ஏந்தி காணாமற் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை இதுவரை இந்திய அரசாங்கம் பெற்றுத்தரவில்லை. காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதிவேண்டி போராடும் நாம் அடக்கியொடுக்கப்படுகிறோம்.



உலகில் அமைதியான சூழலை உருவாக்குவதற்கும் மோதல்களைத் தவிர்ப்பதற்கும் சிறந்த பங்களிப்பைச் செய்தவர்களை அங்கீகரிக்கும் வகையில், அமைதிக்கான நோபல் பரிசு மோடிக்கு வழங்கப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. நோபல் பரிசை மோடி பெறுவதற்குத் தகுதியற்றவர் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தி எதிர்ப்பு வெளியிட்டனர். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்றில் வீழ்ந்த மூதாட்டி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

கிணற்றில் தவறி விழுந்து மூதாட்டி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

மாவிட்டபுரம் வடக்கு அமெரிக்கன் மிஷன் வீதியைச் சேர்ந்த முருகேசு நல்லம்மா (வயது - 74) என்ற மூதாட்டியே உயிரிழந்துள்ளார்.

மூதாட்டி கிணற்றுக்குள் வீழ்ந்த சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு அழைக்கப்பட்ட வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ஒ,23)

# டிசெம்பருக்கு முன் தேர்தல் நடக்கும்!

## ஆருடம் கூறுகிறார் மஹிந்த



கொழும்பு, மார்ச் 28

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் தேர்தலொன்று நடைபெறும் என தான் எதிர்பார்ப்பதாக பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார். எந்தத்தேர்தல் நடைபெற்றாலும் அதனை எதிர்கொள்வதற்கு தமது கட்சி தயார் எனவும் அவர் கூறினார்.

அபயராம விகாரையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மஹிந்த ராஜபக்ச மேற்கொண்டவாறு கூறினார்.

தமதும், தமது கட்சியினதும் அரசியல் செயற்பாடுகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன எனவும், பிரிந்து சென்றவர்கள் எதிர்காலத்தில் இணையக் கூடும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ,44)

### மாநகரசபை...

கள் வெளியாகிய விடயத்தைச் சாட்டாக வைத்து யாழ். மாநகரசபை ஆணையாளர் மீது உள்ளக விசாரணை ஒன்றுக்கு உத்தரவிப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. விசாரணைகளின் முடிவில் ஆணையாளரை அங்கிருந்து இடமாற்றும் உத்தரவொன்று வழங்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நாவலர் கலாசார மண்டபத்தின் நிர்வாக நடவடிக்கைகளை யாழ். மாநகரசபையிடமிருந்து பறித்து, இந்து கலாசாரத் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கு வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவிட்டிருப்பதாக அண்மையில் செய்தி வெளியாகியிருந்தது. சத்தஞ் சந்தடி இல்லாமல் நகர்த்தப்பட்ட திணைக்கள ரீதியான ஒரு உள்ளகத் தொடர்பாடல் யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர்கள் ஒரு சிலர் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டமையால், ஆணையாளர் மீது ஆளுநர் விசனமடைந்திருப்பதாகவும், இது குறித்து விசாரித்து, தனக்கு அறிக்கையிடுமாறு அவர் தனது அதிகாரிகளைப் பணித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-ஒ,5)

### ஐ.ஒ.சி.க்கு...

அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர இந்த தகவலை ருவிட்டர் பதிவு ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

சீனாவின் சினோபெக், அவுஸ்திரேலியாவின் யுனைட்டெட் பெற்றோலியம் மற்றும் அமெரிக்காவின் ஆர்.எம். பார்க்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு இலங்கையில் எரிபொருள் விற்பனை சந்தையில் நுழைவதற்கான உரிமங்கள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

இதன் மூலம், இலங்கையில் உள்ள எரிபொருள் சந்தையில் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 150 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் 50 புதிய எரிபொருள் நிலையங்களை நிர்மாணிப்பதன் ஊடாக தமது விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு 20 ஆண்டுகள் வரை உரிமம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ,இ)

### ஐ.ஓ.சி....

இந்திய பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சின் செயலர் பன்கஜ் ஜேன் உள்ளிட்ட குழாத்தினரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

கொழும்பு நகரை அண்மித்து நிர்மாணிக்கப்பட்ட 3 ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையங்களை இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஸ்ரீகாந்த் மாதவ் அண்மையில் திறந்து வைத்துள்ளார். இந்த மாதம் நிறைவடைவதற்குள் 34 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி.யின் முகாமைத்துவப் பணிப்பாளர் மனோஜ் குப்தா ருவிட்டரில் பதிவிட்டுள்ளார். (அ-ஒ,இ)

### பின்னணியில்...

நிலையில் இந்தச் சிலை உடைப்புக்குப் பின்னால் அவர்கள் இருக்கலாம் என்ற சந்தேகம் எமக்கு வலுப்பெற்றுள்ளது - இவ்வாறு ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஆலயச் சிலைகள் உடைக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்தியக் கிளையிலும், நெடுங்கேணி பொலிஸ் நிலையத்திலும் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஆலய நிர்வாகத்தினர் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

தொல்பொருள் திணைக்களத்துக்கு எதிராகவே முறைப்பாடுகளையும் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,110)

### சிறுவர்...

விருத்திச்சங்கத்தின் நிர்வாக அலுவலகம் சிறுவர் இல்ல மாணவர்கள் சிலரால் அடித்து உடைத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுவர் இல்லத்திலிருந்து 3 மாணவர்கள் கடந்த 8 ஆம் திகதி தப்பியோடியிருந்தனர். இவர்கள் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டனர். விடுதியின் முகாமையாளரால் தாக்கப்பட்டமையாலேயே தப்பி ஓடியதாக அவர்கள் நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். நிர்வாகத்தின் வழிகாட்டலுக்கு அமைவாக, தப்பியோடிய 3 சிறுவர்களில் ஒரு சிறுவனின் பெற்றோர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடந்த 20ஆம் திகதி முறைப்பாடு பதிவு செய்தனர்.

இதையடுத்து கோப்பாய் பொலிஸார் 21ஆம், 22ஆம், 23ஆம் திகதிகளில் முகாமையாளரை பொலிஸ் நிலையம் அழைத்து மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை காக்க வைத்துள்ளனர். இந்த நிலையில் கடந்த 23ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ், தனது வழமையான சோதனை நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

முகாமையாளர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பில் அவர் ஆராய்ந்துள்ளார். சிறுவர் துஷ்பிரயோக வழக்குத் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டவுடன் சிறுவனை ஏன் சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தவில்லை என்றும், சந்தேகநபரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தாமல் 4 நாள்கள் இழுத்தடித்தமை ஏன் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இதனையடுத்து கோப்பாய் பொலிஸார் சிறுவனை யாழ். போதனா மருத்துவமனையின் சட்டமருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தியுள்ளனர். அத்துடன் முகாமையாளரைக் கைது செய்து கடந்த 24ஆம் திகதி யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தி 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கோரியுள்ளனர். ஆனால், பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்த நீதிவான் சந்தேகநபரான முகாமையாளரை பிணையில் விடுவித்துள்ளார்.

இதற்கிடையில் சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் நிர்வாகத்தால், அதன் செயலாளரால் மேற்படி முகாமையாளரை வழக்கு நடவடிக்கைகள் முடிவடையும் வரையில் பணி இடைநிறுத்தும் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதம் அவருக்கு பதிவுத் தபாலில் வீட்டுக்கு அனுப்பப்பட்டதுடன் ஒரு பிரதி சங்கத்தின் தலைவரால் நேரடியாக முகாமையாளரிடம் அவரது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து முகாமையாளர், வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்துக்கு மேன்முறையீடு செய்துள்ளார். சங்கத்தின் தலைவருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில், 'சிறுவர் இல்ல சிறுவர்களை தனது வீட்டில் வேலையில் ஈடுபடுத்தினார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு இன்னமும் நிலுவையில் உள்ளது. ஆனாலும், தலைவர் அதே பதவியில் தொடரும் நிலையில் எவ்வாறு தன்னை பதவி நீக்கம் செய்ய முடியும்?' என்று மேன்முறையீட்டு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

மேன்முறையீட்டுக்குப் பதிலளித்த வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர், 'யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முகாமையாளருக்கு எதிராக கோப்பாய் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கில் பிணை வழங்கப்பட்டுள்ளது. அவர் முகாமையாளராகப் பதவியைத் தொடர்வதற்கு நீதிவான் நீதிமன்றில் இடைக்காலத் தடை எதுவும் விதிக்கப்படவில்லை. நீதிமன்றத்தின் தீர்ப்புக் கிடைக்கும் வரையில் அவரை பதவி நீக்கவேண்டாம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் சிறுவர் நீதிமன்றில் சைவ வித்தியா விருத்திச்சங்கத்தால், மேற்படி முகாமையாளருக்கு பதவி விலகல் கடிதம் வழங்கப்பட்ட பின்னரும் அலுவலகத்துக்கு வருவதாகவும், அவர் அவ்வாறு வருவதானது அவருக்கு எதிரான வழக்கில் சாட்சிகளை கலைப்பதற்கு உதவும் என்பதாலும் வழக்கு முடிவடையும் வரையில் பதவியில் தொடர இடைக்காலத் தடை விதிக்குமாறு கோரப்பட்டது. அதற்கு அமைவாக சிறுவர் நீதிமன்றால், முகாமையாளருக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.

இந்தத் தகவல் சிறுவர் இல்லச் சிறுவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சிறுவர் இல்லத்திலிருந்து வெளியேறி அருகிலிருந்த நிர்வாகக் கட்டடத்தை சேதப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை- இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சங்க நிர்வாகத்தினர் கருத்துத் தெரிவிக்கையில்; மேற்படி முகாமையாளரே விடுதிக் காப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார். அவர் சிறுவர்களுக்கு வழங்கப்பட்ட பொருள்களை வெளியில் விற்பனை செய்துள்ளார். சிறுவர்களை அடித்து துன்புறுத்தியுள்ளார். மின்அழுத்தியால் சிறுவர்களுக்கு சூடு வைத்துள்ளார். இது தொடர்பில் சிறுவர்கள் எங்களுக்கு முறைப்பாடு செய்துள்ளனர். அது தொடர்பில் விசாரணை நடைபெறுவதால் அதற்காகவே அவரை பதவியிலிருந்து இடைநிறுத்தும் கடிதம் வழங்கியிருந்தோம். அவரைப் பதவியிலிருந்து இடைநிறுத்தினால், கட்டடங்களுக்கு சேதம் விளைவிப்போம் என்று சிறுவர் இல்லத்தில் மேற்படி முகாமையாளரால் தூண்டப்பட்ட மாணவர்கள் சிலர் எச்சரிக்கை விடுத்திருந்தனர். அவர்கள்தான் இந்தத் தாக்குதல்களைச் செய்திருக்கவேண்டும். மேலும் எமது சங்கத்துக்குட்பட்ட 3 சிறுவர் இல்லங்கள் இயங்கி வருகின்றன. ஏனைய 2 சிறுவர் இல்லங்களிலும் எதுவித பிரச்சினையும் இல்லை. இந்தச் சிறுவர் இல்லத்துக்குப் பொறுப்பான சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தருக்கும் நிர்வாகத்துக்கும் இடையில் சிறு முரண்பாடு உள்ளது. அதனை முகாமையாளர் தனக்குச் சார்பாகப் பயன்படுத்தியிருந்தார் - என்றனர். (அ-ஒ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெடுக்குநாறி...

வெடுக்குநாறி மலையிலிருந்து ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அழித்தொழிக்கப்பட்ட ஈனச் செயல் தமிழ் மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்தப் படுபாதகச் செயலுக்கு எதிராக பலமுனைப் போராட்டங்கள் வெடித்துள்ளன.

**பல்கலைக்கழகம்**

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று மதியம் பல்கலைக்கழகம் முன்பாக போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தின்போது, மண்திறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா, வெடுக்குநாறிமலை, கச்சதீவு ,நெடுந்தீவு எங்கள் சொத்து, காவிகளின் அட்டகாசத்துக்கு முடிவில்லையா?, இராணுவமே வெளியேறு கடற்படையே வெளியேறு, எமது நிலம் எமக்குவேண்டும், தொல்பொருட் திணைக்களமே வெளியேறு போன்ற கோஷங்களையும் எழுப்பினர்.

**நல்லூர்**

இது தொடர்பில் நல்லூர் ஆலயச் சூழலில் இன்று மாலை 4 மணிக்கு கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளதாக, சைவமகா சபையின் பொதுச் செயலர் மருத்துவர் பரா.நந்தகுமார் தெரிவித்தார்.

'இலங்கை சுதந்திரமடைந்த பின்னரே எமது பழமைச் சின்னங்கள் அழிக்கப்படுகின்றன. முல்லைத்தீவிலும், வன்னியிலும், மன்னாரிலும் சைவத்தமிழர்கள் பல்வேறு விதமாக தொடர்ந்தும் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். திருநீறு பூசுவதையும் நடராஜர் சிலை வைப்பதையும் பற்றி பேசும் நாங்கள் இந்த விடயங்களில் கரிசனை கொள்வதில்லை. இவ்வாறான விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக குரல் கொடுக்கப்படவேண்டும். இந்த நிலையிலே நாம் போராட்டத்தை மேற்கொள்ளத் தள்ளப்பட்டுள்ளோம். இவ்வாறான ஆக்கிரமிப்புக்களை நிறுத்த அழுத்தம் பிரயோகிக்க வேண்டுமென சர்வதேசத்துக்கும் செய்தியைச் சொல்கின்றோம்' - என்றார்.

**வவுனியா**

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாக சபையினரின் ஏற்பாட்டில் நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா கந்தசாமி கோயிலில் ஆரம்பமாகும் பேரணி வவுனியா மாவட்டச் செயலகம் வரை நடைபெறவுள்ளதாக அறிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்;

பாரம்பரியமாக நாம் வழிபட்டுவந்த வெடுக்குநாறி மலை ஆதிசிவன் கோயிலை 'இனந்தெரியாத' விஷமிகள் திட்டமிட்டு அழித்துவிட்டனர். எமது இனத்தை நோக்கி ஏவப்பட்ட பல நூற்றாண்டு அடக்குமுறைகளின் இன்றைய வடிவமாகவே இதனை நாம் பார்க்கிறோம். இயற்கைக்கும் மரபார்ந்த நம் இடங்களுக்கும் எவ்வித இடையூறும் ஏற்படாத வகையில்தான் ஆதிசிவன் வழிபாடுகளை ஆற்றிவந்தோம். நாம் நம்பும் தொன்மத் தெய்வங்களை நமது நம்பிக்கையின்படி வழிபடும் உரிமை அனைவருக்குமே உண்டு. ஆனால், தமிழர்களாகிய நமக்கு சுதந்திரமான வழிபாட்டு உரிமை கூட மறுக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த காலங்களில் எமது உரிமைசார் வழிபடும் செயற்பாடுகளை மேற்கொண்ட கோயில் நிர்வாக அவையினராகிய எம்மவர்கள் மிக மோசமாகத் தண்டிக்கப்பட்டனர். தொல்லியல் திணைக்களமும் சிறிலங்கா பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட வழக்கு இன்னமும் ஒரு முடிவுக்கு வராமல் நீள்கிறது. வழக்குத் தொடரப்பட்ட நாளிலிருந்து எதுவித ஆலய வழிபாடுகளையும் செய்ய முடியவில்லை. வழக்குத் தொடரப்பட்ட நாள் தொடக்கம் தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த எமது கோயில் தற்போது முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. இந்தச்செயலானது உலகெங்கும் வாழும் மொத்த தமிழர்களையும் உளப்பூர்வமாகத் தாக்கியிருக்கிறது. நமது வழிபாட்டு உரிமையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. எனவே இந்த உரிமை மறுப்புக்கு எதிரான நமது குரலை உலகின் முன் உரத்துச்சொல்லவேண்டிய கட்டத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறோம். எமது வழிபாட்டு உரிமை நீக்கமும், பண்பாட்டு அடையாள அழிப்பும் நிகழ்த்தப்படும் சமநேரத்தில் அதற்கான எதிர்ப்பையும் கண்டனத்தையும் நம் தெய்வங்கள் காட்டிய அறவழியில் அணிதிரண்டு வெளிக்காட்ட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். எனவே பக்தியும் அறமும் நிறைந்த தமிழர்களும், கட்சித்தலைவர்களும், ஆசிரியப்பெருமக்களும் மற்றும் சட்டவாளர்களும் எமது உரிமைகளுக்காகக் குரலெழுப்ப வருமாறு வேண்டுகிறோம் - என்றுள்ளது. (அ-ஒ.5)

## மரத்துடன்...

மோதியது. சம்பவத்தில் வாகனச் சாரதி உயிரிழந்தார்.

முல்லைத்தீவு, விசுவமடு மேற்கைச் சேர்ந்த கு.கஜிபரன் (வயது - 27) என்பவரே மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றத்துக்கு அண்மையாக நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளார்.

வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'ஹைஏஸ்' வாகனத்தில் சாரதியாக கஜிபரன் நேற்று முன்தினம் 26ஆம் திகதி தர்மபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுள்ளார். அங்கிருந்து உறவினர்களை ஏற்றிக்கொண்டு கண்டிக்குச் சென்றுள்ளார். அன்றைய தினமே கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மீண்டும் பயணித்துள்ளார். உறவினர்களை யாழ்ப்பாணத்தில் இறக்கிய பின்னர் வாகனத்தை மீள ஒப்படைப்பதற்காக நேற்று அதிகாலை தர்மபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றத்தை அண்மித்த பகுதியில் வாகனம் வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரத்துடன் மோதியது. அந்தப் பகுதியால் வந்தவர்கள் சாரதியை மீட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அங்கு அவர் உயிரிழந்துள்ளார். பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-ஒ.113)

## பெற்றோலிய...

பெற்றோலிய தொழிற்சங்க ஒன்றியத்தினர் கொலன்னாவை பெற்றோலிய முனையத்துக்கு முன்பாக சத்தியாக்கிரக போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைத் தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மகா சங்கத்தினரிடம் ஆசிபெற்றதன் பின்னர் இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பமானது. (அ-ஒ.இ)

## வெடியரசன்...

நெடுந்தீவு வெடியரசன் கோட்டையின் வரலாற்றை மாற்றியமைத்து அதை பௌத்த இடமாக மாற்றும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை புதன் கிழமை நெடுந்தீவு பிரதேச செயலகம் முன்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ஒ.5)

## வெடுக்குநாறி மலை...

ஆலய இடித்தழிப்புத் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று மதியம் அவசர கடிதம் ஒன்று மாவை. சேனாதிராசாவால் அனுப்பிவைக்கப்பட்டது. அதில், ஆலயம் இடித்தழிக்கப்பட்டமை இந்து மக்களின் உரிமையை பறிக்கும் செயல் என்றும், ஆலயத்தை அதே இடத்தில் மீள அமைத்துக் கொடுக்கவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மாவை.சேனாதிராசாவின் கடிதத்தையடுத்து நேற்று இரவு அவரை தொலைபேசியூடாக தொடர்புகொண்டு பேசியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

'அமைச்சரவைக் கூட்டம் இப்போதுதான் முடிந்தது. நீங்கள் (மாவை) அனுப்பிய அவசரக் கடிதத்தை பார்த்தேன். ஆலயம் இடித்தழிக்கப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணையை முன்னெடுக்கப் பணித்துள்ளேன். அதனை மீள அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்குமாறும் பணிப்புரை விடுக்கவுள்ளேன்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது மாவை.சேனாதிராசாவிடம் கூறியுள்ளார். (அ-ஒ.5)

## ஆதிலிங்கம்...

கள். குண்டர்களின் காடைத்தனமான செயற்பாட்டைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு இன ரீதியில் - மத ரீதியில் பிளவுகளை ஏற்படுத்த வேண்டாமென சகல தரப்பினரையும் கேட்டுக்கொள்கின்றேன் - இவ்வாறு பௌத்தசாசன மத மற்றும் கலாசார விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலை, நெடுந்தீவு, கச்சதீவு ஆகியவற்றில் தமிழரின் மத அடையாளங்களை அழிக்கும் வகையில் அரசும் தொல்பொருள் திணைக்களமும் செயற்பட்டு வருகின்றன என்று தமிழர் தரப்பினர். இந்துமதத் தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை துறைசார் அமைச்சர் என்ற வகையில் அடியோடு மறுக்கின்றேன்.

குருந்தூர்மலை விவகாரம் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்ட விடயம். இது தொடர்பில் கருத்துக்கள் ஏதும் தெரிவிக்க நான் விரும்பவில்லை.

நெடுந்தீவு, கச்சதீவு விவகாரம் தொடர்பில் தமிழ்த் தரப்பினர் முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பில் அரசு உரிய கவனம் செலுத்தும். கச்சதீவில் கடமையிலுள்ள கடற்படையினர் சிலர் வழிபடுவதற்காகவே அங்கு புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டுள்ளது என்று நான் அறிந்தேன் - என்றார். (அ-ஒ.22)

## குட்டிப்...

ஒரு சிறிய புத்தர் சிலையொன்று கடற்படையினரின் இல்லத்துக்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது - இவ்வாறு கடற்படையினர் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

கச்சதீவில் எந்தவொரு புத்தர் சிலையும் வைக்கப்படவில்லை என்று கடற்டை ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்த நிலையில், இப்படியொரு அறிவிப்பை கடற்படையினர் நேற்று வெளியிட்டுள்ளனர். கடற்படையினரின் அறிவிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கச்சதீவின் பாதுகாப்புக் கருதி கடற்படைக் குழுவொன்று அங்கு கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றது. இந்தக்கடற்படைக் குழுவினர் பாதுகாப்பு கடமைகளுக்கு மேலதிகமாக, இலங்கை கடற்படை பௌத்த சங்கத்தின் பூரண பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தையும் பாதுகாத்து வருகின்றனர். இந்தத்தேவாலயமானது வருடாந்தப் பெருவிழாவின் போது மாத்திரமல்லாது தினமும் சுத்தம் செய்யப்பட்டு, விளக்குகள் ஏற்றப்பட்டு, மிகுந்த பக்தியுடன் கடற்படையினர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இந்தத் தேவாலயத்தைத் தவிர, இந்த தீவில் வேறு எந்த நிரந்தரக் கட்டுமானமும் செய்யமுடியாது என்பதால் கடற்படையினர் தற்காலிகமாகக் கட்டப்பட்ட இராணுவ இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

புனித அந்தோனியார் தேவாலயத்தைத் தவிர, இந்தத் தீவில் வேறு எந்த மத வழிபாட்டுத்தலமும் இல்லை, எதிர்காலத்தில் எந்த ஒரு விகாரையையும் கட்ட கடற்படை முயற்சி செய்யாது - என்று குறிப்பிட்டுள்ளனர். (அ-ஒ.இ)

## நாவலர்...

யாழ். மாநகரசபையின் பொறுப்பின் கீழ் இதுவரை காலமும் இருந்து வந்த நிலையில், மாநகரசபையின் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நேரத்தில் வடக்கு ஆளுநர் இந்த தாரைவார்ப்பை மேற்கொண்டுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் அனிருதனுக்கு எழுதிய கடிதத்தில், இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் சமய மற்றும் ஆன்மீக நடவடிக்கைகள் நாவலர் கலாசார மண்டபத்தில் எவ்வித இடையூறுமின்றி நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

நாவலர் மண்டபத்தின் சமய மற்றும் ஆன்மீக நடவடிக்கைகளுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமே முழுப் பொறுப்பாக இருக்க வேண்டும். நாவலர் கலாசார மண்டபம் புனிதமாகப் பாதுகாக்கப்படுவதோடு நடவடிக்கைகளுக்காக மாகாண கலாசார திணைக்களத்துடன் ஒத்துழைத்து செயற்படவேண்டும். நாவலர் நினைவுப் பொது நூலகத்தை யாழ்ப்பாண மாநகரசபையால் பராமரிக்க முடிவதோடு அதற்கான நியாயப்படுத்தல்கள் மற்றும் தொடர்வதற்கு ஒப்புதலை பெறுவதோடு பொறுப்பு வாய்ந்த இரு தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாக்கப்பட வேண்டும் போன்ற நிபந்தனைகளும் ஆளுநரால் விதிக்கப்பட்டுள்ளன. (அ-ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29 லட்சம் குடும்பங்களுக்கு இலவச அரிசி விநியோகம்!

கொழும்பு, மார்ச் 28
29 லட்சம் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் வேலைத்திட்டம் நேற்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.
அவர் மேலும் கூறுகையில்;
விவசாயிகளிடமிருந்து 100 ரூபாவுக்கு நெல்லை கொள்முதல் செய்து அந்த நெல்லை அரிசியாக மாற்றி குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளது.
ஒரு குடும்பத்துக்கு மாதாந்தம் 10 கிலோ அரிசி வீதம் மாதங்களுக்கு இந்த இலவச அரிசிப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.
இந்த வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

## இலவச அரிசி வழங்கல் மன்னாரில் ஆரம்பம்

மன்னார், மார்ச் 28
அரசாங்கத்தின் இலவச அரிசி வழங்கும் திட்டம் மன்னாரில் நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.
நெல் கொள்வனவு மற்றும் நெல் கையிருப்பு அகற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் அனுசரணையில் இலவச அரிசி வழங்கும் திட்டம் மன்னாரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
மன்னார் மாவட்டச்செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு முருங்கன் சிறுகண்டல் கிராமத்தில் அமைந்துள்ள பலநோக்கு மண்டபத்தில் வைத்து மேற்படி அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன.
(ம-14-60)

# ஐ.தே.க. அரசாங்கத்துக்கு ஆணை வழங்கவேண்டும்

## காரியவசம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 28
ஜனாதிபதியின் வேலைத்திட்டத்துக்கு பொதுஜன பெரமுன கட்சியும் ஆதரவு வழங்கியுள்ளது. எனவே, அடுத்து ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஆட்சியொன்று அமையவே மக்கள் ஆணை வழங்க வேண்டும் இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும், முன்னாள் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எமது கட்சித் தலைவரும், ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தீர்க்க தரிசனமாகக்கூறிய பல விடயங்கள் தற்போது உண்மையென நிரூபணமாகி வருகின்றன. அதனால்தான் தனி ஒருவராக நாடாளுமன்றம்சென்று, முழு நாட்டையே நிர்வகிக்கும் வகையில் தற்போது தீர்மானங்களை எடுத்துவருகின்றார். இன்று வரிசை யுகம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மின்வெட்டு அமுலில் இல்லை. மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டமும் ஆரம்பமாகும். இனித்தான் யானையின் பலம் தெரியவரும். ஜனாதிபதியின் பின்னால் பலர் அணிதிரள்கின்றனர். பலர் எதிர்காலத்தில் இணைவார்கள். மொட்டுக் கட்சியினரும் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தை அனுமதிக்கின்றனர். எனவே, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பலமுனைப் போட்டி இருக்காது - என்றார். (ம-44)


### நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

லயன் பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
வயது:- 10 மாதம்
ஆறு தடுப்பு ஊசிகளும் ஏற்றப்பட்டுள்ளது.
தொடர்புகளுக்கு:
**021 205 1648, 077 117 8618**

### மணமகள் தேவை

யாழ். இந்து (V) குலத்தில் பிறந்த, கனடாவை வதிவிடமாகக் கொண்ட 42 வயது திருவாதிரை, 16 1/2 பாவமுடைய மணமகனுக்கு அழகிய குணமுள்ள படித்த மணமகளைத் தாயார் எதிர்பார்க்கிறார்.
தொடர்புகளுக்கு:
**074 266 5997**

### இலங்கைப் போக்குவரத்துச் சபை (வட பிராந்தியம்) பாவனையில் இருந்து கழிக்கப்பட்ட ரயர்கள் ஏல விற்பனை

இலங்கை போக்குவரத்துச் சபை வட பிராந்தியத்தில் உள்ள சாலைகளில் கழித்து களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ரயர்களை ஏல விற்பனை மூலம் விலை மனுகோரி விற்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கிழமை நாள்களில் பிராந்திய காரியாலயத்தில் ஏல விற்பனைப் பத்திரத்தை பெற்று பூரணப்படுத்தி கூறுவிலை சமர்ப்பிக்கும் பெட்டியினுள் **"தலைவர் கூறுவிலைச் சபை இலங்கை போக்குவரத்து சபை (வடக்கு)"** என்று முகவரியிட்டு **03.04.2023 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு** முன்னதாக போடப்பட வேண்டும்.

அன்றைய தினமே பிற்பகல் **15.00** மணிக்குப்பின் ஏல விற்பனைக்கான நடவடிக்கை இடம்பெறும்.

விருப்பமானவர்கள் கிழமை நாள்களில் காலை **9.30** மணி தொடக்கம் **15.00** மணிவரை வட பிராந்தியத்தில் கழிக்கப்பட்ட ரயர்களைப் பார்வையிடலாம்.

**தலைவர்,**
**கூறுவிலைச் சபை, வட பிராந்தியம்**

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 22 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு:**
- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- **A-9** பிரதான வீதியில் இருந்து **700M** தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 132 உள்ளன.
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை
- **பார்வையிடும் நேரம்:**
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.
- தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு:- ஜெயம்**
**077 814 7389**
**077 986 5457**

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 87 பரப்புக் காணி விற்பனைக்கு
**மேட்டு நிலம் (நிலப்பரப்பு)**




* யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து 100 M தூரத்தில்.
* 15 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
* குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி.
* நன்னீர் ஊற்று நிலம்.
* ஒருபரப்பின் விலை (300,000/-) மூன்று இலட்சம் மற்றும் (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
* விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த காணி.
* பருத்தித்துறை வீதியிலிருந்து 1 KM தூரம். சோமாஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 KM தூரம்.
* **பார்வையிடும் நேரம் :**
**காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.**

**Owner@Director.**
**T.Kalaithasan(Karan)**
**076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**
**Office No.:021 3155 900**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம் : advt@uthayan.com
பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.